பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 14 சனிக்கிழமை 01.10.2022 கதிர் 328

### இது ரகசியம் அல்ல!

திருகோணமலைக்கு தமிழரசின் எம்.பி. பதவி ஒன்றை வழங்கும்படி திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கிளை எழுப்பி இருக்கும் கோரிக்கையை ஒட்டிய பிரச்சினை சூடு பிடித்துள்ளது.

அங்கு நேற்று விஜயம் செய்த தமிழரசுக் கட்சியின் ☞2

# திருமலைக்கு மற்றொரு எம்.பி.; பரிசீலிக்கத் தமிழரசு இணக்கம்

## கட்சியின் நால்வர் குழு நேரில் சம்மதம் தெரிவிப்பு கொழும்பில் சம்பந்தனுடன் பேசுவது எனவும் முடிவு

திருகோணமலை, ஒக்ரோபர் 01

பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் முதலாவது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை திருகோணமலை மாவட்டத்திற்கு வழங்குவது என்று தேர்தல் சமயத்தில் தமது மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவு செய்யுமாறு திருகோணமலை மாவட்டத் தமிழரசு கட்சி நேற்று முன்வைத்த வலியுறுத்தலை கட்சியின் தலைவர், செயலாளர், சிரேஷ்ட துணைத் தலைவர், சிரேஷ்ட துணைச்செயலாளர் ஆகிய நால்வர் அடங்கிய குழு பரிசீலித்து நிறைவு செய்ய இணக்கம் தெரிவித்தது. ☞12

## நாணய நிதிய உதவி கிட்டுவதற்கான காலக்கெடுவைக் கணிப்பது கடினம்

### அத்தரப்பில் தகவல் தெரிவிப்பு

இலங்கையுடனான கலந்துரையாடல்கள் ஆரோக்கியமானதாக காணப்படுகின்ற போதிலும், கடன் நிவாரணம் குறித்துத் தீர்மானம் எடுக்க அதிக காலம் செல்லும் என்பதால், இலங்கைக்கு நிவாரணம் வழங்கும் காலக்கெடுவைக் கணிப்பது கடினம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் விரைவாக தீர்மானம் எடுக்கும் பட்சத்தில் இலங்கை நெருக்கடியிலிருந்து ☞12

## பணவீக்கம் செப்ரெம்பரில் 70 வீதமானது

இலங்கையின் பணவீக்கம் மேலும் அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இலங்கையின் வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் 2022 ☞2

## காந்தி ஜயந்தியை ஒட்டி யாழில் சைக்கிள் பேரணி



மகாத்மாகாந்தியின் பிறந்த தினத்தினை முன்னிட்டு யாழ் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் சைக்கிள் பேரணி நேற்றுக் காலை நடைபெற்றது.

மகாத்மா காந்தியின் பிறந்த தினம் ☞2

### ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விடயம்:

## தம் மீதான வழக்கை எதிர்த்து மைத்திரி ரிட் மனுத் தாக்கல்!



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தமக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கை இடைநிறுத்துமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை ☞2

## யாழ்ப்பாணத்தில் 4 வீடுகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணைப் பகுதியில் நான்கு வீடுகள் மீது நேற்று முனதினம் அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வண்ணார்பண்ணைப் பகுதியில் புதனிரவு நவராத்திரியை ☞2

## கட்டுநாயக்காவில் 4 பயணிகள் ரூ.17 கோடி தங்கத்துடன் கைது




சட்டவிரோதமான முறையில் தங்கத்தை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற 04 விமானப் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கப் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் நடத்திய சோதனையில் 17 கோடி ரூபா ☞2

## இந்த மாத இறுதியில் அரசியல் சுனாமி தாக்கும் என ஹிருணிகா முன்னறிவிப்பு

### ரணில் அரசின் நாள்கள் எண்ணப்படுகின்றனவாம்



ஒக்டோபர் (இந்த மாத) இறுதியில் ஏற்படும் அரசியல் சுனாமி அனைத்து ஊழல் அரசியல்வாதிகளையும் அழிக்கும் என ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தை தெரிவிப்பதற்காக என்னை சி.ஐ.டியினர் விசாரணைக்கு அழைக்கலாம். ஆனால் ஒக்டோபர் மாத இறுதியில் நிச்சயம் இந்தப் புரட்சி வெடிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சுனாமி தாக்கும்போது முன்னைய ☞2

## தென்னமரவாடி, திரியாய் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு டிசெம்பர் 2ஆம் திகதி

திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடி, திரியாய் போன்ற பகுதிகளில் தமிழ் விவசாயிகளின் பூர்வீக காணிகளில் அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தடுக்கு விதத்தில் தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எதிராக திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கின் தீர்ப்பு டிசெம்பர் 2ஆம் திகதி வழங்கப்படவிருக்கின்றது.

இந்த வழக்கில் தமிழ் விவசாயிகளுக்காக ஆஜராகிய பின்னர் தாம் நடத்திய ஊடக சந்திப்பில. வழக்கின் விவரங்களை ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெளிவுபடுத்தினார். அவர் கூறியவை வருமாறு:-

நிலங்கள் சம்பந்தமாக தொல்லியம் திணைக்களம் மற்றும் வெவ்வேறு சட்டங்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் வடக்கிலும் கிழக்கிலும் மக்களுடைய காணிகளை அபகரிக்கும் செயற்பாடு நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்றது.

அதன் ஒரு அங்கம்தான் திருகோணமலை ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையிலான உயர்மட்ட குழு மாவட்ட கிளையின் வலியுறுத்தலை சாதகமாகப் பரிசீலிக்க இணங்கியிருக்கின்றமை முக்கிய திருப்பம்.

அதேவேளை, இவ்விவகாரத்தினால் இன்னொருபெரும்சர்ச்சைக்குவெற்றிலை வைத்து வாசல் திறக்கப்பட்டிருப்பதாகவும் தோன்றுகின்றது.

தமிழரசின் திருகோணமலை மாவட்டக் கிளை நேற்று இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்தி இருப்பதாகத் தெரிகின்றது.

ஒன்று - திருகோணமலை மாவட்டத் தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனைப் பதவி விலகும்படி தாங்கள் கோரவேயில்லை என்பது.

அடுத்தது - தேர்தல் சமயத்தில் தமக்கு வாக்குரிமை அளித்தபடி தமிழரசின் முதலாவது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை நாடாளுமன்றத்தின் அரைவாசிப் பதவிக் காலம் முடிவடையும் இப்போதைய சூழ்நிலையிலாவது திருகோணமலைக்கு வழங்குங்கள் என்பது.

இதுதான் அந்த இரண்டு விடயங்கள். அதற்குத் தமிழரசுத் தலைமை இணங்கி இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் இவ்விடயத்தை சுமுகமாக ஒப்பேற்றுவதற்கு ஒரே வழி தான் உள்ளது.

இப்போது தமிழரசின் தேசியப் பட்டியல் எம்.பியாக இருக்கும் கலையரசனை ராஜினாமாச் செய்ய வைத்து, அந்த இடத்தை திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் குகதாசனுக்கு வழங்க வேண்டும். அதுதான் ஒரே வழி.

இந்த விடயத்துக்கு கலையரசன் இணங்குவாரா, அத்தகைய கோரிக்கை முன்வைக்கப்பட்டால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் தமிழரசுக் கிளைகளில் எத்தகைய குழப்பங்கள், சர்ச்சைகள் ஏற்படும் என்பவை முற்கூட்டியே ஊகிக்க முடியாத விடயங்கள். அதிலும் அம்பாறையில் பெரும் குழப்பம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதனைத் தமிழரசுத் தலைமை எவ்வாறு கையாள போகின்றது என்பது சுவாரஸ்யமான கேள்விதான்.

ஆனாலும் இதில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

தமிழரசின் தேசிய பட்டியல் எம்.பி. பதவி மீது முதலில் கண் வைத்து, இப்போதும் அதை எதிர்பார்த்து இருப்பவர் தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசாதான்.

அது தமக்கு கிடைக்காமல், இடையில் வெட்டி, கலையரசனுக்கு வழங்கப்பட்டு விட்டது என்ற தலைமைத்துவச் சீற்றம் இன்னும் மாவை சேனாதிராசாவுக்கு உண்டு.

இயன்ற விரைவில் அம்பாறையின் கரையரசனைத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியில் இருந்து நீக்கிவிட்டு, அந்த இடத்துக்குத் தான் போவதற்கு மாவை சேனாதிராசா துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றார் என்று பேச்சு அவ்வப்போது அடிபட்டது. கட்சியின் உள்வீட்டுத் தகவல்களும் அதை உறுதி செய்தன.

அந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை அம்பாறை கலையரசனிடம் இருந்து பிடுங்கி திருகோணமலை குகதாசனிடம் கையளித்து விட்டால், இந்த நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தில் அது தமக்குக் கிடைக்கவே கிடைக்காது, இந்த நாடாளுமன்றத்தில் தான் எம்.பியாகும் சாத்தியம் நிரந்தரமாகத் தடைப்பட்டு போகும் என்பவை எல்லாம் மாவை சேனாதிராசாவுக்கு நன்கு தெரியும்.

அப்படி இருந்தும் அந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை குகதாசனுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு மாவை சேனாதிராசா நேற்றுத் தாமாகவே முன் நின்று இணக்கம் தெரிவித்திருக்கின்றார்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் கூடிய இந்தத் தலைமைத்துவப் பண்புக்காக மாவை சேனாதிராசாவைப் பாராட்டலாம் என்று திருகோணமலை மாவட்ட தமிழரசு பிரமுகர் ஒருவர் நேற்று இரவு தெரிவித்தார்.

நானும் அதை அங்கீகரிக்கிறேன். நீங்கள் - வாசகர்கள் - இது குறித்து என்ன நினைக்கின்றீர்கள்? இதற்காக உங்கள் பாராட்டும் மாவைக்கு உண்டு என்று நம்புகிறேன். அது சரிதானே...?

**- மின்னல் -**

## பணவீக்கம் செப்ரெம்பரில் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செப்டம்பர் மாதம் பதிவாகியுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் செப்டம்பர் மாதத்தில் 69.8 வீதமாகப் பதிவாகியுள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 64.3 வீதமாக பதிவாகியிருந்தது. ஓகஸ்ட் மாதத்தைக் காட்டிலும் செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 5.5வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதேவேளை உணவுப் பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 93.7 வீதமாக இருந்த நிலையில் செப்டம்பரில் அது 94.9 வீதமாக உயர்ந்துள்ளது. உணவில்லாப் பொருள்களின் பணவீக்கம், 50.2 வீதத்தில் இருந்து 57.6 வீதமாக உயர்ந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னிட்டு ஆலயத்துக்காகக் கட்டப்பட்டிருந்த மின் விளக்குகளை மதுபோதையில் சென்ற இருவர் உடைத்த நிலையில், அவர்களைக் குறித்த பிரதேச இளைஞர்கள் பிடித்து எச்சரித்து அனுப்பினர் .

இந்த நிலையில், நேற்று அதிகாலை 2 மணியளவில் வந்த ஆறு பேரைக் கொண்ட குழு அந்தப் பகுதியிலுள்ள நான்கு வீடுகள் மீது தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது . இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இந்த மாத இறுதியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியின் நிலை தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என தெரிவித்துள்ள ஹிருணிகா எந்தப் புரட்சியும் முன் அறிவிப்புடன் நிகழ்வதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த அரகலயவில் பெண்களே முக்கிய பங்களிப்பை செய்தனர் என குறிப்பிட்டுள்ள அவர், இந்த தடவையும் நாங்கள் தலைமைத்துவம் வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியின் நாள்கள் எண்ணப்படுகின்றன. மத்திய தர வர்க்கத்தை சேர்ந்தவர்களே கடந்த தடவை வீதியில் இறங்கினார்கள். ஆனால் இம்முறை வறிய மக்கள் எழுச்சிக்கு தலைமை தாங்குவார்கள். - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காந்தி ஜயந்தியை ஒட்டி ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாளை ஒக்டோபர் 02ஆம் திகதியாகும். அதனை முன்னிட்டு, யாழ் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள காந்தி சிலையில் முன்றிலில் இருந்து, வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி வரை சைக்கிள் பேரணி சென்றது.

யாழ் இந்திய துணைத் தூதுவரின் பங்கு பற்றுதலோடு மும்மதத் தலைவர்களின் ஆசியோடு இந்த பேரணி ஆரம்பமானது.

## தம் மீதான வழக்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக கொழும்பு கோட்டை நீதிவான் மற்றும் அந்த நீதிமன்ற பதிவாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெறவுள்ளதாக தகவல் கிடைத்தும் அதனைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தேக நபராக பெயரிட்டு எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கட்டுநாயக்காவில் 4 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெறுமதியான 08 கிலோ 500 கிராம் எடையுள்ள தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்றுக் காலை 7.40 மணியளவில் ஓமானின் மஸ்கட்டில் இருந்து ஓமான் எயார் லைன் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய தம்பதியரும் 50 வயதுடைய நபரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கொழும்பு மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவர் உடலில் மறைத்து வைத்திருந்த சுமார் 01 கிலோ எடையுள்ள நகைகள் மற்றும் நான்கு தங்க பிஸ்கட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான வகையில் இக்குழுவினரின் நடமாட்டத்தை அவதானித்த சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் சோதனையிட்ட போது இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

## தென்னமரவாடி, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டம் திரியாய் மற்றும் தென்னமரவாடி கிராமத்தில் தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளில் அவர்கள் விவசாயம் செய்வதைத் தடுத்த ஒரு நடவடிக்கை. இது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்றது.

அந்த வேளையில் நிலத்திற்கு உரித்தான விவசாயிகள் மேல் நீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்து இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றிருந்தார்கள். அந்த வழக்கை ஆதரித்து வாதாடியவர் சட்டத்தரணி கேசவன் சயந்தன். இடைக்கால உத்தரவை மேல்நீதிமன்றம் வழங்கி தொல்பொருள் திணைக்களம் விவாயிகளுக்க இடையூறு கொடுக்க கூடாது, விவசாயிகள் தங்கள் நிலங்களில் விவசாயம் செய்ய உரித்துடையவர்கள் என கட்டளை பிறப்பித்திருந்தது.

அந்த வருடம் விவசாயிகள் தங்களுடைய விவசாய நிலங்களில் செய்கையை மேற் கொண்டு அறுவடை செய்யக் கூடியதாக இருந்தது.ஆனால் அதற்கு பிறகு தொடர்ச்சியாக விவசாயிகள் தடுக்கப்பட்டனர். வேறு பல அச்சுறுத்தல்களுக்கும் விவசாயம் செய்வதற்கான தடுப்புக்களும் மேற் கொள்ளப்பட்டு தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை இவ்வருடமும் மேற்கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த பின்னணியிலே இறுதி விவாதத்திற்கு இன்று 30 ஆம் திகதி மேல் நீதிமன்றத்திலே இந்த வழக்கு எடுக்கப்பட்டது. சட்டத்தரணி கேசவன் சயந்தனுடன் நானும் இந்த வழக்கிலே ஆஜராகி வாதாடி இருக்கின்றோம். மிக முக்கியமாக மாகாண மேல் நீதி மன்றுக்கு நிலம் சம்மந்தமான எழுத்தாணைகளை வழங்குகின்ற அதிகாரம் இல்லை என்ற வாதத்தை அரச தரப்பு முன் வைத்திருந்தது.

அரசமைப்பின் படி காணி அதிகாரம் மாகாணத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. மாகாண நீதி மன்றம் எழுத்தாணை வழங்குகின்ற போது எந்த ஒரு நபருக்கு எதிராகவும் மாகாண நிரலில் உள்ள விடயம் சம்மந்தமாக எழுத்தாணை வழங்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அரசமைப்பில் உள்ள குறித்த விடயத்தை மன்றுக்கு நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

நூறு வருடங்களுக்கு முற்பட்ட காணி உறுதிகளை குறித்த காணி உரிமையாளர்கள் வசம் உள்ளன. அவற்றை நாம் வழக்கிலே காட்சிப்படுத்தி இருக்கின்றோம். ஆகையால் இவை அரச காணி அல்ல. தனியார் காணி. இந்த காணியிலே தங்களுடைய விவசாயத்தை செய்வதற்கு அவர்களுக்கு உரித்துண்டு. அதை தடுப்பதற்கு எவருக்கும் உரிதில்லை என்ற வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

வழக்கினுடைய இறுதித் தீர்ப்பு எதிர்வரும் டிசெம்பர் 02 ஆம் திகதி என திகதியிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக நவம்பர் மாதத்திலே இரு தரப்பினரும் எங்களுடைய வாதங்களுக்குச் சார்பான எழுத்து மூல சமர்ப்பணங்களை செய்யலாம் என நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிலங்கள் சம்பந்தமாக தொல்லியம் திணைக்களம் இது போல வெவ்வேறு சட்டங்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் மக்களுடைய காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடு வடக்கிலும் கிழக்கிலும் நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்றது. எனவே இந்த வழக்கின் தீர்ப்பு ஒரு முக்கியமான தீர்பாக அமையும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். - என அவர் மேலும் தெரிவித்தார்.







# தமிழர் வாழ்வியலை சிதைத்த பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்று மூவின மக்கள்மீதும் பாய்ந்திருப்பது விசித்திரமானது!

## அம்பாறையில் தவிசாளர் ஜெயசிறில் சீற்றம்

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியலை முற்றாக சீரழித்தது. லட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறையில் வாடக் காரணமாக இருந்தது. இன்று அந்தச்சட்டம் மூவின மக்கள் மீதும் பாய்ந்திருப்பது விசித்திரமானது அல்ல.

– இவ்வாறு அம்பாறை மத்திய முகாம் பகுதியில் தமிழரசு கட்சியால் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சீற்றத்துடன் கூறினார்.

தமிழரசுக் கட்சியின் ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலும் அவர் கூறுகையில் –

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்ற தமிழரசுக் கட்சி 25 மாவட்டங்களிலும் இந்த கையெழுத்து வேட்டையை நடத்தி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தச் சட்டத்தால் தமிழ் இளைஞர்கள் தமிழினம் பல்வேறு அடக்கு முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. இதனால் வடக்கு, கிழக்கு தாயக மண்ணிலே எமது தமிழ் மக்கள் சொல்லொணா துயரத்தில் தள்ளப்பட்டார்கள். வாழ்வியல் சின்னாபின்னமாகியது.

அன்று தமிழ் மக்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்று முஸ்லிம் இளைஞர்கள், நாட்டில் இருந்த அராஜக அரசியலை விரட்டி அடித்த அறகல போராட்டக்காரர்கள் மீதும் பாய்ந்து இருக்கின்றது.

அதற்காகத்தான் மூவின மக்களும் சேர்ந்து இந்தப் பொல்லாத சட்டத்தை நீக்கும்படி கோரி இந்த கையெழுத்து வேட்டையை நாடுபூராகவும் நடத்தி வருகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய மக்களை வேதனைப்படுத்தி தமிழ் மக்களுக்கு சுதந்திரம் வேண்டும்என்று ஒருபோதும் கேட்கவில்லை .

ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற உரிமை, சுதந்திரம் போன்றவற்றை எமது தமிழ் மக்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம். இல்லாததைக் கேட்கவில்லை. நாம் எமது உரிமைகளைத்தான் கேட்கின்றோம்.

நாம் எந்த இனத்துக்கும் எதிரானவர்கள் அல்லர்.

எமது பயணம் தேச விடுதலைக்காகவும் மக்களுக்காகவும் தொடர்ச்சியாக நடைபெறும்.





# முதியவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை?

அரசாங்கத்தால் முதியவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவுகள் இதுவரையில் வழங்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறைந்த வருமானத்தை பெறும் 70 வயதைக் கடந்தவர்களுக்கு மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய இந்தக் கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதிக்குள் வழங்கப்படும்.

எனினும் இந்த மாதத்துக்கான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# துறைமுகநகரம் குறித்த அதிவிசேட வர்த்தமானி!

கொழும்புத் துறைமுக பொருளாதார ஆணைக் குழுவின் ஒழுங்கு விதிகள் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

நிதி பொருளாதார, ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகள் தொடர்பான அறிவித்தலே இவ்வாறு வெளியாகியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அரசியல் சுனாமி அடிக்குமா?

**இன்று மாதப் பிறப்பு. இந்த மாத இறுதிக்குள் நாட்டில் பெரும் அரசியல் சுனாமி ஒன்று அடிக்கப் போகின்றது என்றும், முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்த கதி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படப் போகின்றது என்றும், எதிரணி அரசியல் பிரமுகரான ஹிருணிகா பிரேமச்சந்திரா தெரிவித்திருக்கிறார்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்தில் இருந்து துரத்தும் மக்களின் எழுச்சி மிரிஹானவில் உள்ள அவரது அப்போதைய உத்தியோகபூர்வ இல்லத்தின் முன்னால் திடீரென நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்தை அடுத்துத்தான் உத்வேகமும் வீச்சும் கொண்டது. அந்த மிரிஹான போராட்டத்தைத் துணிச்சலோடு பாதுகாப்பு படைகளின் தடைகளையும் மீறி, முதலில் முன்னெடுத்தவர் இந்த ஹிருணிகாதான்.**

**மக்கள் எழுச்சி, வீச்சுப் போன்றவை தொடர்பில் அவரது கருத்துக்கு ஓரளவு நம்பகத்தன்மை இருந்தாலும் கூட, எந்த மக்கள் புரட்சியும் முன்னறிவிப்புடன் நிகழ்வதில்லை என்று ஹிருணிகாவே இப்போது கூறியிருக்கின்றமையும் அவதானிக்கப்பட வேண்டியதுதான்.**

**அத்தகைய மக்கள் எழுச்சி கோலங்களுக்கான ஏது நிலைகள் நிலவுகின்றன என்பதும் உண்மையே. மக்களை அத்திசையில் தூண்டி, நெட்டித் தள்ளுவதற்கான வாழ்வியல் நெருக்கடிகள், இக்கட்டுகள், கஷ்டங்கள், துன்ப, துயரங்கள் தாராளமாகவே இங்கு இருக்கின்றனதான். எனினும் அவையெல்லாம் தன் பாட்டில் மக்களை ஆட்சி பீடத்திற்கு எதிரான – கடந்த ஜுலை புரட்சி போன்ற – நிலைக்கு தள்ளி விடா. வீதிக்கு மக்களைக் கொண்டு வந்தும் விடா.**

**மக்கள் புரட்சி நிலைக்கான களச் சூழல் காணப்பட்டாலும், அது கருக் கட்டுவதற்கான வாய்ப்பு தென்படுவதாக இல்லை. எதிர்க்கட்சிகளும் அரச எதிர்ப்பு சக்திகளும், மீண்டும் ஒரு தடவை அத்திசையில் மக்களை உசுப்பேத்தும் தகுதி நிலையில் இருப்பனவாகவும் தெரியவில்லை.**

**எனினும், அரசு – ஆட்சி பீடம் – மக்களின் மனவோட்டத்தையும் கள யதார்த்தங்களையும் புரிந்து கொள்ளாமல், தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுவது போல ஏதேனும் கைங்கரியத்தை புரிந்து, வினையைத் தேடி விலைக்கு வாங்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மே 9 ஆம் திகதி இப்படி தேவையற்ற ஒரு தாக்குதலை கண்மூடித்தனமாக நடத்தத் தூண்டி ராஜபக்ஷக்கள் தங்கள் தலையில் தாங்களே மண்ணள்ளிப் போட்டமை இவ்விடயத்தில் நினைவு கூரத் தக்கது.**

**வெளிநாடு சென்றிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நள்ளிரவு நாடு திரும்பினார். இனி எச்சமயத்திலும் அமைச்சரவை மறு சீரமைப்பு நிகழும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒன்றுக்கும் மேற்பட்ட அமைச்சுகளை வைத்திருப்போர் அவற்றை இழக்க வேண்டி வரலாம். புதியவர்களுக்கு நியமனம் கிடைக்க பழையவர்கள் சிலர் வீட்டுக்கு அனுப்பப்படலாம்.**

**இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு அல்லது விஸ்தரிப்பு நெருப்பு மூளுவதற்கான தீக்குச்சிப் பற்ற வைப்பாகவும் இருந்துவிடலாம்.**

**அதுதான் நாட்டின் மோசமான அரசியல் கள நிலைவரம் ஆகும்.**

# அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி பொது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல்!

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி பொது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறல் ஆகும். இந்த சட்டத்தை இல்லாமல் செய்வதாயின், நாடாளுமன்றில் கொண்டு வந்து இல்லாமலாக்க முடியாது.

உச்ச நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றுதான் தீர்க்க முடியும். மேலும், ராஜபக்ஷக்களையும் அவர்களது குடும்பங்களையும் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டினார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகஷ்யில் –

அதி உயர் பாதுகாப்பு வலயம் குறித்த வர்த்தமானி பொது மக்களின் அடிப்படை உரிமை மீறல் ஆகும். அரசமைப்பின்படி கட்டடங்கள், விமானம், கப்பல் ஆகியவற்றுக்காவே இந்த பாதுகாப்பு வலயம் உள்ளடங்குவதாக அரசமைப்பின் 1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கத்தின் அரச இரகசியங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், நாடாளுமன்ற வளாகம், உச்ச நீதிமன்ற வளாகம், உயர் நீதிமன்ற வளாகம், கொழும்பு கோட்டை நீதிமன்றம், சட்ட மா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு அமைச்சு, விமான நிலையத் தலைமையகம், அலரி மாளிகை, பிரதமரின் செயலாளர் காரியாலயம், பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படை தளபதி ஆகியோரின் உத்தியோகபூர்வ இல்லம் ஆகியன அதி உயர் பாதுகாப்பு வலயமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

இவை கடுமையான செயற்பாடாகும். இந்த சட்டத்தை இல்லாமல் செய்வதாயின், நாடாளுமன்றில் கொண்டு வந்து இல்லாமலாக்க முடியாது. உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றுதான் தீர்க்க முடியும். – என்றார்.

அரச ஊழியர்கள் சமூக வலைத்தளங்களில் அரசியல் தொடர்பான கருத்துக்களை வெளியிடுவதற்கு அரசாங்க நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும். உண்மையான தரவுகளையும் தகவல்களையும் வெளியிடுவதற்கு அரச ஊழியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் ஸ்ரீலங்கா கட்சியின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டார்.

# நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உள்ளூர் கட்சிகளின் அர்ப்பணிப்பு அவசியம்!

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து மீள உள்ளூர் கட்சிகளின் அர்ப்பணிப்பு அவசியமானது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து மீள வெளியுலக ஆதரவும் முக்கியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சூரிய சக்தியிலான மின் படலங்களை இந்திய கடன் உதவியின்கீழ் பெறல்!

கொழும்பு, ஒக். 01

மத வழிபாட்டு தளங்களில் சூரிய சக்தியிலான மின் படலங்களை பொருத்துவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மதவழிபாட்டு தளங்களில் சூரிய மின் உற்பத்தி படலங்களை பொருத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் இடம்பெற்றது

மேலும் இந்தியாவின் கடன் உதவியின் கீழ் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அறியமுடிகின்றது.

இதேவேளை இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, கல்வி இராஜாங்க அமைச்சர், சில அமைச்சுக்களை பிரதிநிதித்துவபடுத்தும் அதிகாரிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள்கள் பாவனை தொடர்பாக யாழ். இந்துவில் இணையவழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.01

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் மாணவர்களிடையேயான மிதமிஞ்சிய போதைப் பொருள் பாவனையால் பல மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டும் வருகின்றார்கள்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் இணையவழியிலான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று (சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினுடைய செயலாளரும், வைத்தியருமான கோ.ரஜீவ் தொகுத்து வழங்க, யாழ்.போதனா மருத்துவமனையின் உளநல வைத்திய நிபுணர் வைத்தியர் சிவதாஸ் சிறப்புரை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா கோரும் நிரந்தர இடம்

## எக்காலமும் இழுத்தடிக்க முடியாது என்கிறார் ஜெய்சங்கர்

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் கட்டமைப்பைச் சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தை என்றென்றும் மறுத்துக் கொண்டிருக்க முடியாது, ஆயினும், இது எளிதான செயல் என்று இந்தியா ஒருபோதும் நம்பவில்லை எனவும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

தற்போது, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அமைப்பின் நிரந்தரமற்ற பத்து உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று. ஒரு நிரந்தர உறுப்பினருக்கு மட்டுமே எந்தவொரு உறுதியான தீர்மானத்தையும் ரத்து செய்யும் வீட்டோ அதிகாரம் உள்ளது.

பாதுகாப்பு கவுன்ஸிலைச் சீர்திருத்தம் செய்வதற்கான பல வருட முயற்சிகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அது நிரந்தர உறுப்பினராக இடம் பெறுவதற்குத் தனக்குத் தகுதியுள்ளது என்று உரிமை கோருகிறது.

இது ஒரு எளிதான செயல் என்று நாங்கள் ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனால், சீர்திருத்தத்தின் அவசியத்தை என்றென்றும் மறுக்க முடியாது என்று நாங்கள் நம்புகிறோம் – என்று ஜெய்சங்கர் புதன்கிழமை இந்திய பத்திரிகையாளர்கள் குழுவிடம் கூறினார்.

பாதுகாப்புச் கவுன்ஸிலில் சீர்திருத்தம் செய்வதில் அமெரிக்காவின் தீவிரத்தன்மை குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

”எனது புரிதல் என்னவென்றால், ஜனாதிபதி (ஜோ) பிடன் முன்வைத்த நிலைப்பாடு, பாதுகாப்பு கவுன்ஸில் உட்பட ஐ.நாவின் சீர்திருத்தத்திற்கான அமெரிக்காவின் ஆதரவின் மிகவும் வெளிப்படையான மற்றும் குறிப்பிட்ட பிரதிபலிப்பாகும் – என்று அவர் கூறினார்.

எனவே, இது எதையாவது மீண்டும் வலியுறுத்துவதாக நான் நினைக்கவில்லை, அந்த அர்த்தத்தில் நான் கருதவில்லை, இது வழக்கம் போன்ற விவகாரம் தான். இப்போது, இது எவ்வாறு முன்னேறுகிறது, எங்கு செல்கிறது என்பது நம் அனைவரையும் சார்ந்துள்ளது



ஐ.நா. உறுப்பினர்கள் மற்றும் நாம் அதை எங்கு கொண்டு செல்கிறோம் என்பதில் உள்ளது என்று அவர் கூறினார்.

எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் அது ஒரு தனி நாட்டின் பொறுப்பு அல்ல. ஐ.நா. உறுப்பினர்கள் செய்ய வேண்டிய கூட்டு முயற்சி என்று நான் நினைக்கிறேன். அரசுகளுக்கு இடையிலான பேச்சுகள் உட்பட அனைத்துத் தளங்களிலும் சீர்திருத்த முயற்சிகளை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். தயக்கம் எங்கிருந்து வருகிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள், அதில் கவனம் செலுத்துவோம் – என்று ஜெய்சங்கர் கூறினார்.

அதிக பொறுப்புகளை ஏற்க இந்தியா தயாராக உள்ளது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டிய ஜெய்சங்கர், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் சீர்திருத்தங்களுக்கான பேச்சுவார்த்தைகள் நடைமுறை தந்திரங்களால் தடுக்கப்படக் கூடாது என்றும், இந்த செயல்முறையை 'நிரந்தரமாக பணயக்கைதி போன்ற' விவகாரமாக வைத்திருக்க முடியாது என்றும் ஜெய்சங்கர் கூறினார்.

பதினைந்து நாடுகளைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் தற்போது நிரந்தரமற்ற உறுப்பினராக உள்ள இந்தியா, இந்த ஆண்டு டிசம்பரில் தனது இரண்டு ஆண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்யும்.

“பெரிய பொறுப்புகளை ஏற்க இந்தியா தயாராக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் உலகளாவிய தெற்கு எதிர்கொள்ளும் அநீதி தீர்க்கமான முறையில் தீர்க்கப்படுவதை உறுதி செய்ய முயல்கிறதுஎன்று ஜெய்சங்கர் ஐ.நா. பொதுச் சபையின் உயர்மட்ட பொது விவாதத்தில் தனது உரையில் கூறினார்.

எங்கள் காலத்தில், கவுன்ஸில் எதிர்கொண்ட சில தீவிரமான ஆனால் பிளவுபடுத்தும் பிரச்சினைகளுக்கு நாங்கள் ஒரு பாலமாக செயல்பட்டோம். கடல் பாதுகாப்பு, அமைதி காத்தல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு போன்ற கவலைகளிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம் – என்று அவர் கூறினார்.

ஜெய்சங்கர் மற்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் ஆகியோர் நியூயோர்க்கில் நடந்த சந்திப்பின் போது பாதுகாப்பு கவுன்ஸிலில் சீர்திருத்தம் மற்றும் உக்ரைன் மற்றும் மியான்மர் நிலைமைகள் குறித்து விவாதித்தனர்.

ஐ.நா.வின் உயர்மட்ட பொதுச் சபையில் உரையாற்றிய பிறகு ஜெய்சங்கர், குட்டெரெஸை சனிக்கிழமை நியூயோர்க்கில் சந்தித்தார்.

ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் உடன் அழுத்தும் உலகளாவிய சவால்களைப் பற்றிய விரிவான விவாதம் நடத்தினோம். நிகழ்ச்சி நிரலில் உக்ரைன் மோதல், ஐ.நா. சீர்திருத்தம், ஜி20 கட்டமைப்பு, காலநிலை நடவடிக்கை, உணவு பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான தரவுகள் ஆகியவை அடங்கியிருந்தன என்று ஜெய்சங்கர் பின்னர் ட்வீட் செய்துள்ளார்.

(மூலம்: 'இண்டியா டுடே')

# இந்தியாவின் முப்படைகளின் தலைமைத் தளபதி நியமனம்





இந்தியாவின் முப்படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற லெப்டினனன்ட் ஜெனரல் அனில் சவுஹான் பொறுப்பேற்று கொண்டார். பின்னர் அவர், அனைத்து சவால்களையும் முப்படைகளும் இணைந்து சமாளிக்கும் என்றார்.

ராணுவம், கடற்படை, விமானப் படை உள்ளிட்ட முப்படைகளுக்கும் தலைமை வகிக்கும் உயரிய பொறுப்பான முப்படைகளின் தலைமை தளபதி என்ற பதவி 2020ல் உருவாக்கப்பட்டது. முதல் தலைமை தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் பொறுப்பேற்றார்.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் அருகே கடந்த 2021 டிசெம்பர் மாதத்தில் நடந்த ஹெலிக்கொப்டர் விபத்தில், ஜெனரல் பிபின் ராவத், அவரது மனைவி உட்பட, 13 பேர் உயிரிழந்தனர். அவர் உயிரிழந்து ஒன்பது மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், புதிய தலைமை தளபதி நியமிக்கப்படாமலேயே இருந்தது.

இந்நிலையில், முப்படைகளின் புதிய தலைமைத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் அனில் சவுஹானை நியமிப்பதாக மத்திய அரசு புதனன்று அறிவித்தது. தொடர்ந்து,நேற்று அனில் சவுஹான் முப்படை தலைமை தளபதியாக பொறுப்பேற்று கொண்டார். தொடர்ந்து பாதுகாப்பு படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று கொண்டார். அப்போது, முப்படைகளின் தளபதிகள் உடன் இருந்தனர்.

பின்னர் அவர் கூறுகையில், இந்திய ஆயுதப்படைகளின் மிக உயர்ந்த பதவியை ஏற்றுக்கொள்வதில் பெருமையாக உள்ளது. முப்படை தலைமை தளபதி என்ற முறையில் 3 படைகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சி செய்வேன். அனைத்து சவால்கள், சிக்கல்களை இணைந்து சந்தித்து சமாளிப்போம். – இவ்வாறு அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, டில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடம் சென்ற அனில் சவுஹான், வீரமரணமடைந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.



1961, மே 18 இல் பிறந்த அனில் சவுஹான், இந்திய இராணுவத்தின் கூர்கா ரைபிள்ஸ் படைப்பிரிவில் 1981 இல் பணியில் சேர்ந்தார். ஜம்மு – காஷ்மீரின் மிகக் கடுமையான பாராமுல்லா பகுதியில், வடக்கு படைப்பிரிவில் காலாட்படையின் மேஜர் ஜெனரலாக பதவி வகித்துள்ளார். வடகிழக்கு படைப்பிரிவில் லெப்டினன்ட் ஜெனரலாகவும், கிழக்கு படைப்பிரிவில் ஜெனரல் ஒபிஸர் கொமாண்டிங் – இன் – சீவ் ஆகவும் பணியாற்றி உள்ளார்.

இவர், 2021, மே மாதம் பணி ஓய்வு பெற்றார். சிறப்பான இராணுவப் பணிக்காக பரம் வசிஷ்ட் சேவா, உத்தம் யுத் சேவா உட்பட பல்வேறு பதக்கங்களை பெற்றுள்ளார்.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** சீன அதிபரை அந்நாட்டு இராணுவம் சிறை வைத்திருப்பதாய்ச் செய்திகள் வருகின்றதே?

பதில்:- வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது இதனைத்தான்! அவரால் வளர்க்கப்பட்டுப் பல அட்டூழியங்களைச் செய்துநின்ற இராணுவம், இன்று அவரையே கைது செய்திருப்பதாய்ச் சொல்கிறார்கள். இது பல தலைவர்களுக்கும் ஒரு பாடமாய் இருக்கவேண்டிய விடயம். எங்கள் நாட்டுத் தலைவர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்!

இப்போது சீனத் தலைவரைச் சிறைப்பிடித்திருப்பதல்ல பிரச்சினை. அது சம்பந்தமாய் நாம் ஆராய வேண்டிய விடயங்கள் பற்றித்தான் முதலில் நாம் சிந்திக்கவேண்டும்.

* சிறைப்பிடித்தவர்கள் இராணுவத்தினர் என்று பொதுப் படச் சொல்லப்படுகிறது. குறித்த ஒருவரின் உத்தரவால்த்தான் இது நடந்திருக்கக் கூடும். அந்த உத்தரவை இட்டவர் யார்? என்பது முதல் கேள்வி.

* இராணுவத்தை இன்று கையகப்படுத்தித் தன் வசம் வைத்திருக்கும் அந்தத் தலைவர் தானாய்ப் புரட்சி செய்கிறாரா? அல்லது வேறெந்த நாட்டினது ஆதரவுடன் இப் புரட்சியைச் செய்கிறாரா? என்பது இரண்டாவது கேள்வி.

* ரஷ்யா, உக்ரெயின் யுத்தத்தில் சீனத் தலைவர் ரஷ்யாவின் பக்கமாய் நின்றது இப் புரட்சிக்கான காரணமாயிற்றா? என்பது மூன்றாவது கேள்வி.

* புரட்சியாளர்கள் ரஷ்யாவை முன்னைவிட அதிகமாக ஆதரிக்கப் போகிறார்களா? அல்லது அதற்கு அளித்த ஆதரவிலிருந்து பின்வாங்கப் போகிறார்களா? என்பது அடுத்தகேள்வி.

* புரட்சியின் பின்னால் அமெரிக்க, ஐரோப்பிய நாடு களின் கரங்கள் இருக்கின்றனவா? என்பது இன்னொரு கேள்வி.

* இப் புரட்சியால் ஆசியக் கண்டத்தில் விளையப் போகும் மாற்றங்கள் என்ன? என்பது வேறொரு கேள்வி.

* இப்புரட்சியாளர்கள் இலங்கையுடனான உறவை எப்படிக் கையாளப் போகிறார்கள்? என்பது எல்லாவற்றையும் விட எமக்கு முக்கியமான கேள்வி.

இப்படியே ஒரு சம்பவத்திலிருந்து பல கேள்விகள் பிறந்து குழப்புகின்றன. காலம் பதிலளிக்க வேண்டும். ஞாலம் அதனைத் தாங்கவேண்டும். அவ்வளவு தான்!

**உலகநாதரின் ஒப்பீனியன் * வெடித்தது சீன வெடி. ஹி.. ஹி..**

**2. கேள்வி:-** சீ.வி.கே. சிவஞானம் அவர்கள், ஐ.நா. மனித உரிமை 'கவுன்சில்' கூட்டத்திற்குச் சென்று நம் தலைவர்கள் தமிழில் ஆற்றும் உரைகளால் பயன் ஏதும் விளையாது என்கிறாரே?

**பதில்:-** அக் கருத்தை முழுமையாய் நான் ஒத்துக் கொள்ளமாட்டேன். உலகநாடுகள் கலந்து கொள்ளும் சபையில் ஆங்கிலத்தில்த்தான் பேசவேண்டும் என்ற கட்டாயம்; ஏதும் இல்லை. உக்ரெயின் அதிபர் தங்களின் தாய்மொழியிலேயே பேசிப் பல உலக அரங்குகளைக் கலங்கடித்துக் கொண்டிருக்கிறார். அதனால் அங்கு நம்மவரும் தமிழில் பேசுவது தவறாகாது என்றே நினைக்கிறேன்.

ஆனால் ஒன்று! எந்த மொழியிலும் பேசலாம் என்பது வேறு விடயம். பேசுகிறவரின் ஆழம் என்ன? என்பதும், அவர் பேசுகிறபொழுது தருகிற ஆதாரம் என்ன என்பதும், அவரது இனப்பற்று உண்மையானது தானா? என்பதும், அவரது உண்மைத்தன்மை உலகத் தலைவர்களைத் தொடுமா? என்பதும்தான் முக்கிய விடயங்கள் என்று கருதுகிறேன். அப்படியான தகுதி கொண்ட தமிழ்த்தலைவர்கள் எவரேனும் இங்கிருந்து பேசச் சென்றார்களானால், தமிழில் பேசினாலும்கூட வெற்றி வரும் என்பதே என் கருத்து. அத்தகைய தலைவர்கள் எம்மிடம் இருக்கிறார்களா? என்கின்ற முதல் கேள்விக்கே சரியான பதில் சொல்ல முடியாமல் இருக்கிறது. இந்த நிலையில் போனவர்கள் பற்றியும் அவர்கள் பேசிய பாஷை பற்றியும் சிந்தித்து என்ன பயன்?

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் பாலைவனத்தில் பசுமரம் தேடுகிறார்.**

**இந்த கிண்டல்தானே வேணாம் எங்கிறது. ஹி..ஹி..**

**3.கேள்வி:-** சம்பந்தன் ஐயாவை எல்லோருமாகச் சேர்ந்து கதிரையை விட்டுத் தள்ளிவிடுவார்கள் போல் இருக்கிறதே. அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** வருகிற செய்திகள் உண்மைதானா என்று தெரியவில்லை. உண்மையானால், முதலில் சம்பந்தன் ஐயாவுக்குச் சில சொல்லவேண்டும். ஆயிரம் தான் வெளி அழுத்தங்கள் அவரை அந்த இருக்கையில் அழுத்தி உட்கார வைத்திருந்தாலும், செயலாற்ற முடியாத நிலை வந்த பின்பும், அசையாமல் அந்தக் கதிரையில் குந்தியிருந்தது அவரது முதல் குற்றம்.

அதில் இருக்கும் போது அவசியமான விடயங்களிலும், துணிந்து முடிவுகள் எடுக்காமல் விட்டது அடுத்த குற்றம். 'சமாளிப்பையே' தனது கொள்கையாய்க் கொண்டு இயங்க நினைத்தது மூன்றாவது குற்றம். தன் இயலாமையால், கட்சியைச் சிதையச் செய்தது நான்காவது குற்றம். தனது வயது மூப்பென்றையே தலைமைப் பதவிக்கான தகுதியாய் நினைந்தது ஐந்தாவது குற்றம். தன் கண்ணுக்கு முன்னால் கட்சியினர் வெளிப்படையாக அடித்துக் கொள்ளவும், அதைப் பார்த்துக் கொண்டு எந்தக் கவலையும் இல்லாமல் இருந்தது எல்லாவற்றையும் விடப் பெரிய குற்றம்.

இதைவிட நேர்மையற்ற தேர்வுகள், நடுநிலைமையற்ற செயற்பாடு என அவரது குற்றப்பட்டியலை எழுதப் புறப்பட்டால் அது நீண்டு கொண்டே போகும் போல்த் தெரிகிறது. இதுபற்றி நான் முன்னரே பலதரம் எழுதியிருக்கிறேன். அப்போது கேட்டிருந்தால், இப்போது அவரது கட்சிக்குள்ளேயே புரட்சி வெடித்து அவரின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள முயன்றிருக்க மாட்டார்கள். அப்படி முயல்கிறார்களா? என்பதும், முயல்கிறவர்கள் வெல்வார்களா? என்பதும் வேறு கேள்விகள்.

சம்பந்தன் ஐயாவுக்கான செய்திகள் போலவே, அவருக்கு எதிராகப் புரட்சி செய்ய நினைப்போருக்கும் சில சொல்லவேண்டியிருக்கிறது. சம்பந்தன் ஐயாவைத் துரத்துவதோடு புரட்சி முடிவுறாது. அவர் இடத்தில் அவரைவிடத் தகுதியுள்ள எவரை இவர்கள் இருத்தப் போகிறார்கள்? என்பது, இவர்களுக்கான முதல் கேள்வி. அத்தகைய ஒருவர் இவர்களுக்குள் இருக்கிறாரா? என்பது அடுத்த கேள்வி. தகுதியுள்ளவர் இருந்தாலும் அனைவரையும் அணைத்துப் போகக் கூடிய ஒருவராய் அவர் இருப்பாரா? என்பது மற்றொரு கேள்வி. அப்படித்தான் இருந்;தாலும் அவரை ஏற்க தலைமை ஆசைபிடித்த மற்றைய உறுப்பினர்கள் ஒருமனதாய்ச் சம்மதிப்பார்களா? என்பது தொடரும் கேள்வி. இப்படியாய் இவர்களுக்கான கேள்விகளும் சரியான பதில்கள் இல்லாமல் நீண்டு கொண்டே போகின்றன.

நிறைவாக ஒன்றைச் சொல்லவேண்டும். இப்படித்தான் முன்பொருதரம், கட்சிக்குள் தன் குடும்பத்தாரைத் தவிர புதிய தலைவர்களைத்; தலையெடுக்க விடாமல் செய்து வந்த கலைஞர் மு.கருணாநிதிக்கு எதிராக, கட்சியில் சிலரைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு புரட்சி செய்யப் புறப்பட்டார் வை.கோபாலசாமி அவர்கள். ஆனால் கலைஞரின் இராஜதந்திர முதிர்ச்சிக்கு முன்னால் அவரால் ஒன்றும் செய்யமுடியாமல் போயிற்று. கடைசியில் 'உள்ளதும் கெட்டான் கொள்ளிக்கண்ணன்' என்ற கதையாய்ப் போய், இன்றைக்குக் கிட்டத்தட்ட ஒரு அரசியல் அநாதையாய் ஆகியிருக்கிறார் அவர். இந்த வரலாற்றையும் புரட்சி செய்ய முனைவோர் மறந்துவிடக்கூடாது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கலைஞரைப் போல சம்பந்தரா? ஹி.. ஹி.. வாரிதியாருடைய கற்பனை கொஞ்சம் 'ஓவர்' தானுங்கோ.**

**4. கேள்வி:-** தியாகி திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்னால் நடைபெற்ற, நம் அரசியல்காரரின் சண்டையைப் பார்த்தீர்களா? ஒரு துறவிக்குக்கூட அவர்கள் மதிப்புக் கொடுக்கத் தவறிவிட்டார்களே!

**பதில்:-** அந்தக் கண்றாவியை ஏன் கேட்கிறீர்கள்? இன்னும் எத்தனை அசிங்கங்களை நாம் பார்க்க வேண்டி இருக்கப்போகிறதோ? பிணத்தை விற்றுப் பிழைக்க நினைக்கிறார்கள்! இதைவிடக் கீழ்மை வேறெங்கே இருக்கமுடியும்? தியாகங்களைச் செய்ய முடியாதவர்கள், பிறர் செய்த தியாகங்களை விற்றுப் பிழைக்கப் பார்க்கிறார்கள். இந்த அநியாயத்தில், அந்த விடயத்தில் யார் முதலில் என்ற போட்டி வேறு! நம் இனத்திற்காகப் பட்டினி கிடந்து செத்துப்போன அந்தத் தியாகியின் நினைவிடத்திற்கு முன்னால், நடந்த 'திண்டு கொழுத்துப் போனவர்களின்' சண்டை, அவர்களின் தரத்தை மக்களுக்கு இனங்காட்டி இருக்கிறது. பாரதி சொன்ன 'முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா' பாட்டுத்தான் நினைவிற்கு வருகிறது.

'தமிழினத்தை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று, அமரர் தந்தை செல்வா அவர்கள் முன்பொருமுறை சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். போகிற போக்கைப் பார்த்தால், இனி கடவுளாலும் நம் இனத்தைக் காப்பாற்ற முடியுமா? என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

அடுத்ததாய் என்ன கேட்டீர்கள்? துறவிக்கு அவமரியாதை என்றா? என்னை, வம்பில் இழுத்துவிடாதீர்கள்! 'இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே' என்று சும்மாவா சொன்னார்கள். இதுபற்றி நான் எப்பவோ சொல்லிவிட்டேன். இனி அதுபற்றிப் பேச என்ன இருக்கிறது? ஆளை விடுங்கள் சாமி!

**உலகநாதரின் ஒப்பீனியன் * பூனை இல்லாத வீட்டில எலி பூட்டப்பிள்ளை காணுமாம்.**

**இதில பூனைக்குப் பதிலாகவும் எலிக்குப் பதிலாகவும் எந்தெந்தப் பெயர்களைப் போடவேண்டும் என்று உங்களுக்கே தெரியும் தானே!**

**ஹி..ஹி..**

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பாம்பின் கால் பாம்பறியும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 137**

அடுத்தகட்டப்பேச்சுவார்த்தைகளிலும் கூட தாயகத்தில் மக்களது அவல நிலையும், கடற்பரப்புகளில் விடுதலை புலிகள் கட்டுப்பாடு இன்றி பயணிக்க முடியாத நிலையும்தான் முக்கியமாகப் பேசப்பட்டன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு பகுதியினரும் மேலதிக ஆயுதக் கொள்வனவுகள் மேற்கொள்ளக் கூடாது என்ற இணக்கங்கள் இருந்தாலும், அவை விடுதலை புலிகளுக்கு எதிராக மட்டும் தடையாக நிறுவப்பட்டது. ஸ்ரீலங்கா அரசு அந்த ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகள் புலிகளுக்கு எதிராக அல்ல, நாட்டில் வேறு பாதுகாப்புகளுக்கு என அர்த்தம் கூறிப் பெரும் பொருள் விரயம் செய்து, கொள்வனவும் உதவிகளாகவும் பெற்றுக் கொண்டிருந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இரு பகுதிகளும் சரிசமமான நிலையில் இருந்து பேசுவதாகவும் அந்த பேச்சுக்கள் முடியும் வரை அந்த நிலை பேணப்பட வேண்டும் என்றும் இணக்கங்கள் இருந்தன.



யசூசி அகாஷி

ஸ்ரீலங்கா இறைமை கொண்ட நாடு. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்காக அவர்களின் இறைமைக்காகப் போராடிய அமைப்பு. ஆயினும் அவர்கள் பேச்சுவார்த்தைக்காக சரிசம நிலையில் நடத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டமை பாலசிங்கத்தினால் சுட்டிக் காட்டப்பட்டு, ஆயுத ரீதியிலும் மனிதாபிமானக் கடப்பாடுகளிலும் அந்தச் சமநிலை பேணப்படாது, கோடிக்கணக்கான டொலர் அந்நிய செலாவணி புனர்வாழ்வுக்குப் பாவிக்கப்படாமல், ஆயுதங்களுக்கு செலவழிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுகளைப் புலிகள் சார்பாக முன்வைத்தார்.

ஸ்ரீலங்காவின் பிரதிநிதி அவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, கடல் பகுதிகளில் எழுகின்ற முரண்பாடுகளையும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றியும் கண்காணிப்பு குழு அவற்றைத் தீர்க்க ஒத்துக் கொள்ளலாம் என்றும், தாங்கள் (அரசு) விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதற்காக ஸ்ரீலங்காவுக்கு இருக்கும் சர்வதேச பொறுப்புகளில் பாராமுகமாக இருக்க முடியாது என்றும், தாக்கப்பட்ட விடுதலை புலிகளின் கப்பல் தங்களை அடையாளப்படுத்தாததாலும், அது ஆயுதங்களை சர்வதேசக் கடலில் கடத்துகிறது என்பதாலும் மூழ்கடிக்கப்பட்டது என்றும் விளக்கமளிக்கும் வாதத்திலேயே நின்றார்.



விடார் ஹெல்கிஸன்


இந்தப் பேச்சுக்கள் ஜப்பானில் நடைபெற்றமையால் ஸ்ரீலங்காவிற்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியும் புனர்வாழ்வு, மனிதாபிமான வாழ்வாதாரங்கள் பற்றிய பேச்சு பகுதிக்குத் தலைமை வகித்தார். அவர் பேச்சுவார்த்தை காலத்தில் நிறுவப்பட்ட SIRHN கட்டமைப்புக்கு ஆலோசகராக இருந்தார்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதி தமிழ்ச்செல்வன் இந்தக் கட்டமைப்பு இருந்தாலும் எது வித நம்பிக்கையான செயற்பாடுகளும் இடம்பெறவில்லையாதலால் உயர பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலோ அன்றில் மற்ற ஸ்ரீலங்காவின் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும் பிரதேசங்களிலோ மக்கள் மீளக் குடியேறுவதற்கு முட்டுக்கட்டைகள் இராணுவத்தினால் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்தார். இருந்த போதும் இராணுவப் பிரதிநிதி தாங்கள் தங்களது நிலைகளை விட்டுக் கொடுக்கத் தயார் இல்லை எனவும், வேண்டுமானால் தாங்கள் குடியிருப்புக்குப் பாவிக்கும் சில பொதுக் கட்டடங்களில் இருந்து வெளியேறி, யாழ்ப்பாணத்தில் அந்த முகாம்களை அமைக்கலாம் என்றுநிலைப்பாடுதெரியப்படுத்தப்பட்டது. அதற்கு விடுதலை புலிகள் இணங்கவில்லை. புனர்வாழ்வுக் கட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதேயொழிய அந்தக் கட்டமைப்பு வறண்ட நிலத்தில், புல்லு, புண்ணாக்கு கிடைக்காது எலும்பும் தோலுமாக, ஒரு சொட்டு பால் கூட கறக்க முடியாத நிலையில் இருந்த பசு போல் தான் காணப்பட்டது. ஆனாலும் கறவைக்கு அது சுற்றுலா போடப்பட்டது.

அரசியல் பகுதியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானபோது மதியுரைஞர் விடுதலைப் புலிகள் தங்களது அரசியல் குழுவை இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களையும் உள்ளடக்கி விரிவுபடுத்தி இருப்பதாகவும், அவர்கள் ஆழமாக சமஷ்டி முறையிலான அரசமைப்புக்கள் பின்பற்றப்படும் நாடுகளின் குடியரசு அமைப்பு போன்றவற்றை ஆராய்ந்து, அவர்களின் அங்கத்தினர்களுக்கு இவை பற்றி கருத்தாக்கங்கள் நடத்தி, நாட்டிலும் புலத்திலும் புத்திஜீவிகளுடனும் கலந்துரையாடி, சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்க முனைவர் என்பதைத் தெரிவித்தார்.

இந்த அமர்வின் முடிவில் இணக்கப் பேச்சுகளில் ஈடுபட்டிருந்த விடார் ஹெல்கிஸன் நடந்த பேச்சு வார்த்தைகளை எடை போட்டார். அதாவது பாதுகாப்பு, மனிதாபிமானம், அரசியல் என்று மூன்று பகுதிகளில் அரசியல் தரப்பில் பாரிய முன்னேற்றமும், பாதுகாப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளில் மிகக் குறைவாகவே வளர்ச்சியோ முன்னேற்றங்களோ இருந்தன என்ற கணிப்பைத் தந்தார். அவர் அரசியல் ரீதியில் முன்னேற்றம் இருந்தது என குறித்தது விடுதலைப் புலிகளால் சமஷ்டி அடிப்படையில் உருவாகும் தீர்வை ஆராயலாம் என மதியுரைஞர் தெரிவித்த இணக்கத்தைத்தான்.

ஆனால் தங்களுக்கு இருந்த உளவுத் தகவல்களால், ஸ்ரீலங்காத் தரப்புப் பிரதிநிதிகள் முருங்கை மரத்தில் ஏறினார்கள் என்று புலிகள் கருதினர். அடிப்படையில் தீர்வை நோக்கி ஆராயலாம் என்று ஏற்றுக் கொண்ட பின், அது யதார்த்தமாகத் தரப்பட்டால், பின் சுய நிர்ணயம், அதன் அடிப்படை என்ற பேச்சுக்கு ஏன் இடம் வர வேண்டும், அதற்கான அடிப்படையில் தீர்வு ஒன்றை ஆராய இனி விஸ்தரிக்கப்பட்ட அரசியல் குழு ஏன் அமைக்கப்பட வேண்டும் என்பதே அரசுத் தரப்பின் கேள்வியாக எழுப்பப்பட்டது.



மிலிந்த மொறகொட

ஆனால் அதைப்பற்றி பேச ஏழாவது சுற்று பேச்சுக்கள் 29 ஏப்ரல் 2003இல் தாய்லாந்தில் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டாலும் ஜப்பானில் நடந்த பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கா பிரதிநிதி மொறகொட மதியுரைஞருக்குத் தந்த தகவல் ஓடும் புளியம்பழமும் ஆக இருந்த இணக்கங்களில் உடைப்புகளை ஏற்படுத்தியது.

### மொரகொட கசிந்த தகவல்

பாதுகாப்பைப் பொறுத்த அளவில் உயர் வலயங்களிலும் ஸ்ரீலங்கா அரசு இறுக்கமாக இருந்தது. அதே சமயம் பேச்சு வார்த்தைகளின் இடையே கட்டமைப்புகளை ஏற்படுத்தினாலும் அவை பிரயோசனமற்றவையாகவும் பெயர் அளவிலுமே இருந்தன. இவற்றினால் விடுதலைப் புலிகளுக்கு பாரிய அதிருப்திகள் ஏற்பட்டன. மக்கள் மத்தியில் இருந்த வாழ்வாதாரப் பிரச்சினைகள் எதுவுமே கவனிக்கப்படாமல், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றங்கள் பற்றி அக்கறைகள் எதுவும் கொள்ளாமல், ஒரு தீர்வு எட்டப்படுகின்றது என்ற பிரச்சாரங்களில் நாட்டின் மீட்புக்காக பிரதமர் ரணில் சர்வதேச நாடுகளிடம் உதவி தேடிக் கொண்டிருந்தார்.

இந்த நிதிகளும் நாட்டின் மீளமைப்புக்கு திட்டங்கள் தென்பகுதிகளை மையமாகக் கொண்டே இருந்தன. ஆதலால் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் மக்களின் பாதுகாப்புக்கும் வாழ்வாதாரங்களுக்கும் முக்கியம் கொடுத்து, அவற்றின் நடைமுறைப்படுத்தலிலேயே அரசியலை பார்ப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இப்படியான சிந்தனைகளில் இருக்க, மொறகொட அமெரிக்காவில் வொஷிங்டனில் 14, 15 ஏப்ரலில் நடக்கவிருக்கும் நிதி உதவிகள் வழங்க அனுசரணை தெரிவித்த நாடுகளின் முன்னோடிக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகள் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட இயக்கமாதாலால் அக்கூட்டத்துக்கு அவர்கள் அழைக்கப்பட மாட்டார்கள் என்றும் செய்தி தந்தார்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடக்க ஏற்பாடு ஆகியிருந்த நன்கொடை தர இணங்கிய நாடுகளின் கூட்டத்திற்கு வெள்ளோட்டமாக இது கருதப்பட்டது. ஆனால் முன்னைய ஏற்பாடுகளில் அமெரிக்காவில் இப்படி ஒரு சந்திப்பு ஏற்படுத்துவதற்கான நடைமுறைகள் இருக்கவில்லை. திடீரென இப்படி ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு, உலக நாடுகளிடம் அரசும் புலிகளும் சேர்ந்தே உதவி கேட்க அணுகுவது என்ற முனைப்பில் இருந்து திட்டமிட்டே புலிகள் ஓரங்கட்டப்பட்டனர். இதனை மதியுரைஞர. பிரபாகரனுக்கும் புலிகளின் மற்றைய முக்கிய தலைவர்களுக்கும் தெரிவித்த போது அவர்கள் வருத்தமும் வேதனையும் அடைந்தனர். இதற்குப் பின் நடந்தவற்றைத் தொடர்ந்து பார்க்கலாம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# திலீபன் நினைவேந்தல் நிகழ்வில் நடந்தவை என்ன?

## காக்கா அண்ணை விளக்க அறிக்கை

**அண்மையில் நடைபெற்ற மாவீரன் தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின்போது இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பில் விடுதலைப் புலிகளின் முன்னாள் மூத்த போராளியும், மாவீரர் அறிவிழியின் தந்தையும், திலீபன் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினருமான காக்கா அண்ணன் தெளிவுபடுத்தல் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன் முழு விவரம் இங்கே பிரசுரமாகிறது.**



தியாகி திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு நடைபெற்ற நல்ல விடயங்கள் அனைத்தும் வரவேற்கத்தக்கவையே. குறிப்பாக பொத்துவிலில் இருந்து புறப்பட்ட வாகனப்பேரணி வடகிழக்கு மக்களின் மத்தியில் தேசியத்தை வலுப்படுத்தும் என்பது எமது நம்பிக்கை. அதுபோல் அடுத்த சந்ததியினர் திலீபன் யார்? எனக் கேட்டால் தியாகத்தில் ஆகுதியானவன் பற்றிக் கட்டாயமாக பெற்றோர் சொல்லுவர். நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து துவிச்சக்கர வண்டியில் எம்மை இனம் காட்டாத முறையில் கிழக்கு மாகாணத்திற்குச் சென்றோம். பொத்துவில் வரை பயணித்து, விடுதலை உணர்வுள்ளவர்களோடு இரகசியமாகத் தொடர்பை ஏற்படுத்தி படிப்படியாக போராளிகளை இணைத்துப் படையணிகளாக அடியெடுத்து வைத்தோம். எங்களுக்கு முன்னதாகவே பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான கனகரத்தினத்தின்




மகன் ரஞ்சன் அவரது தந்தை மீது இயக்கம் நடவடிக்கை எடுத்த பின்னரும் விடுதலையே தனது இலக்கு என இரா.பரமதேவாவுடன் பயணித்தார். இவரும் பரமதேவாவும் பின்னர் புலிகளில் இணைந்து மாவீரர் ஆகினர்.

இத்தகைய வரலாற்றைக் கொண்ட பொத்துவிலில் இருந்து பகிரங்கமாக விடுதலைப் போராட்டத்தில் அகிம்சை வழியில் ஆகுதியாகிய திலீபனின் ஊர்தி புறப்பட்டது மகிழ்ச்சியே.

இதுபோல தீவக நினைவேந்தல் குழுவினர் தீவகத்தின் பல பகுதிகளிலும் பயணித்து ஊர்தியுடன் வந்தடைந்தனர். பல்கலைக்கழக மாணவர்கள் திலீபனின் இல்லம் இருந்த ஊரெழுப் பகுதியிலிருந்து ஊர்திப்பவனியாக வந்தனர். பொத்துவில் – பொலிகண்டி அமைப்பினரின் ஏற்பாட்டிலான ஊர்தி திலீபனின் நினைவு நாளன்று ஊரெழுவில் இருந்து புறப்பட்டு தியாகி சிவகுமாரனின் சிலையடியில் அஞ்சலித்து நினைவுத்தூபியை வந்தடைந்தது. ஏனைய மாவட்டங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

நினைவேந்தலுக்கான பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழகத்திலும், அரசியல் கட்சியான முன்னணியினர் தூபிக்கு பின்னாலும் இரத்த தானங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பெருமளவிலானோர் இதில் பங்களித்தமை மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அளிக்கிறது. இதுபோல ஓவியப் போட்டியும் வரவேற்கத்தக்க நிகழ்வே. அடையாள உண்ணா விரதம் இருந்தோருக்கு எமது அடுத்த சந்ததியினரான பல்கலைக்கழக மாணவர்கள் பேரணியாக வந்து குளிர்பானம் வழங்கி முடித்து வைத்தனர். எல்லாமே திருப்தி அளித்தாலும் தமது அரசியல் விருப்பு வெறுப்புகளை இந் நிகழ்வில் வெளிப்படுத்தியதை திலீபனின் ஆன்மா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்பதனை வலியுறுத்திக் கூறுகிறோம்.

முதல் நாள் நிகழ்வை பொதுவாக நடத்துவதில் எந்த சங்கடமும் இல்லை என முன்னணியின் ஏற்பாட்டுக் குழுப் பொறுப்பாளர் பொன் மாஸ்டர் கூறியிருந்தார். அவரது தரப்பில் பெரும்பாலும் அவர் மட்டுமே திலீபனைக் கண்டிருப்பவர். இவரது வார்த்தையை நம்பி இவ்வருடம் ஆரம்ப நிகழ்வுக்குச் சென்றோம். சட்டத்தரணி சுகாஷ் வரும் வரை எல்லாமே சுமுகமாக நடந்தன. இவர் ஒலிவாங்கியை எடுத்ததும் தமது முன்னாள் சகாக்களான மாநகர மேயர் தலைமையிலான அணியினரை சாடத் தொடங்கினார். இவர் அடிக்கடி பயன்படுத்தும் ஒட்டு குழு என்ற பதமும் இதில் அடங்கியிருந்தது. எமது எதிர்பார்ப்பு தகர்ந்தது. திலீபனின் புனிதமான நினைவு நிகழ்வில் இவ்வாறான அசிங்கம் நிகழ்வதை மாமனிதர் குமார் பொன்னம்பலம் உயிரோடு இருந்திருந்தால் நிச்சயம் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்.

அவரோடு உத்தியோகபூர்வமாக பேச்சு வார்த்தை நடத்த சீலன் தலைமையில் முதன் முதல் சென்ற 4 பேர் கொண்ட அணியில் கலந்து கொண்டவன் என்ற வகையில் இதனை நான் உறுதியாகக் கூறுகிறேன். அவர் எம்மோடு பழகிய விதம், போராளிகள் பற்றி அவரது மனதில் இருந்த உயர்வான கணிப்பு எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டவன் என்ற வகையில், சட்டத்தரணி சுகாஷ் நடந்து கொண்ட விதம் திலீபனின் ஆன்மாவை மட்டுமல்ல மாமனிதர் குமாரின் ஆன்மாவையும் கொச்சைப்படுத்துவதாகும் என மனவேதனையோடு மீண்டும் உறுதிப்படுத்திக் கூறுகின்றேன். குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளுடைய வழக்குகளை அமரர் குமார் எந்த விதமான கொடுப்பனவும் வாங்காமல் வாதாடி விடுவித்ததை நான் நன்றியுடன் நினைவு படுத்துகின்றேன். அவரது புகழை மாசுபடுத்தும் வகையில் அவரது மகன் கண்ணெதிரே நடைபெறும் சம்பவங்களை கண்டும் காணாமல் இருந்தது மேலும் அதிர்ச்சி அளிக்கின்றது.

சுகாஷ் நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் பேசுவது, மாவீரர் நாள் நிகழ்வில் தேசியத்தலைவர் உரையாற்றுவதை போல் தன்னைக் காட்ட முனைவது அடுத்த கோமாளித்தல் தலைவர் பொது எதிரிகள் பற்றியே மாவீரர் நாள் நிகழ்வில் சுட்டிக் காட்டியிருப்பார். சுகாஷின் உரை இலக்குத் தவறி தமிழ் தரப்பை நோக்கியது. அதற்கு நினைவேந்தல்கள் தவிர்ந்த ஆயிரம் மேடைகளை அமைக்கலாம். சுகாஷின் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முன்னாள் போராளி பொன் மாஸ்டர் முனைந்தது அடுத்த அதிர்ச்சி. முதல் நாள் அளித்த உறுதி மொழிக்கு மாறானது. சுகாஷின் நடவடிக்கையே பொதுக் கட்டமைப்பு ஒன்றை அவசரமாக ஏற்படுத்தும் நிலையை ஏற்படுத்தியது. இவ்வளவு நாளும் தமிழரின் கடைசித் தலைவர் கஜேந்திரகுமார் என்று கூறி வந்த அவர், இப்போது தன்னையும் தேசியத் தலைவராகக் கற்பனை செய்வது சிறுபிள்ளைத்தனம், அன்று அந்த நிகழ்வை அவர் கொச்சைப்படுத்தாமல் இருந்திருந்தால் பொதுக் கட்டமைப்புக்கான தேவையே இருந்திருக்காது.

மேலும் கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே திலீபனின் நிகழ்வை சச்சரவில்லாமல் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும் என்ற நோக்கில் தீவக நினைவேந்தல் குழுவினர் சில தரப்பினரை அணுகினர். தூபி அமைந்திருக்கும் இடம் மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் நகர முதல்வரையும் சந்தித்தனர். அவர் நகரின் முதல் பிரஜை என்ற வகையில் நகரபிதா எனவும் அழைக்கப்படுவார். அதன் அர்த்தத்தைச் சரியாக அவர் உணர்ந்து கொள்ளாதது வருத்தமளிக்கிறது. இப்போது நாம் ஆட்சியில் இருப்பதால் நாமே இதனைச் செய்யப் போகிறோம் என்று கூறியதன் மூலம் ஏனைய தரப்பினரை அணுகும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். நகர பிதா என்ற வகையில் பொதுக் கட்டமைப்புக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வாளர்களுக்கு அழைப்பு விடுத்திருக்க வேண்டும். அவர்களால் உருவாகும் கட்டமைப்பிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு தம்மிடம் இருந்து கோரும் உதவிகளை இயன்றவரை செய்து தருகிறோம் என்று ஒதுங்கி இருக்க வேண்டும்.

நினைவு தூபிப் பகுதியில் தீவக நினைவேந்தல் குழுவினர் சிரமதானப் பணிகளை மேற்கொள்கையில் முதல்வர் தரப்பும் இணைந்து கொண்டது. இந்நிலையில் முன்னணி தரப்பு தமது நிகழ்ச்சி நிரலை வெளியிட்டனர். இதனால் விளையப் போகும் விபரீதத்தை உணர்ந்து கொண்ட தீவகக் குழுவினர் என்னுடன் தொடர்பு கொண்டனர். இந் நிலையில் இரு தரப்புகளுக்கும் இடையில் சிறு சிறு முரண்பாடுகள் தோன்றின. முதல்வர் நாட்டில் இல்லாதபடியால் அவரது தரப்பைச் சேர்ந்த பார்த்தீபனைத் தொடர்பு கொண்ட போது எந்த முடிவெடுத்தாலும் தமக்குச் சம்மதமே என்றார். இதன்படியே நான் பொன் மாஸ்டருடன் தொடர்பு கொண்டேன்.

சுகாஷ் பரபரப்புக்காக எதையும் சொல்வார். 13வது திருத்தத்திற்கு எதிராகவும் ஒற்றை ஆட்சியை எதிர்த்துமே திலீபன் உண்ணா நோன்பினை மேற்கொண்டார் என்றும் கண்டுபிடித்தார். நவம்பர் மாதம் 14ஆம் தேதி 1987இல் தான் 13வது திருத்தம் பாராளுமன்றில் நிறைவேறியது திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தது செப்டம்பர் 15ஆம் திகதி.

பொதுக்கட்டமைப்பின் உண்ணா விரதம் முடித்து வைக்கப்பட்டதும் குரு முதல்வரிடமும் வேலன் சுவாமிகளிடமும் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்க முனைந்தனர். ஒலிபெருக்கியின் சத்தம் அதிகமாக இருந்ததால் சற்றுக் குறைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் சத்தத்தை அதிகரித்தனர். அவர்களின் நோக்கம் சீண்டி விடுவதன் மூலம் பொதுக் கட்டமைப்பினை நிதானம் இழக்க வைப்பது தான்.

இருவருக்கு உருவேற்றி என்னிடம் அனுப்பி வைத்தனர். அவர்கள் என்னிடம் கேட்ட கேள்விகளுக்கு நான் என்ன பதில் சொன்னால் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்குமோ அதை

“நான் சொன்னதாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்றேன். ‘அப்படியானால் முன்னாள் போராளி என்று சொல்லாதீர்கள்” என்று கடும் தொனியில் அவர்களிருவரும் என்னை எச்சரித்தனர். நான் எப்போதுமே மாவீரர் அறிவிழியின் தந்தை என்று தான் என்னை அறிமுகப்படுத்துவதுண்டு” என்று பதில் சொன்னேன்.

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# திலீபன் நினைவேந்தல் நிகழ்வில் நடந்தவை என்ன?



(09ஆம் பக்கம் பார்க்க)

அப்படியானால் முன்னாள் போராளி என்று உங்களைக் குறிப்பிட வேண்டாம். என ஊடகங்களுக்குச் சொல்லுவது தானே என்று கேட்டனர். நான் எதைச் சொல்ல வேண்டும் எதைச் சொல்லக் கூடாது என உத்தரவிடுகின்றனர் முன்னணியினர் எனப் புரிந்து கொண்டேன்.

“நான் மாவீரரின் தந்தை என்று கூறுவதை உங்கள் ஒருவராலும் மாற்ற முடியாது” எனக்கூறி அவர்களை அனுப்பிவைத்தேன். இச்சம்பவம் நடக்கும் போது ஆத்திரமடைந்த பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர் தனுவை முன்னணியினர் அடையாளம் கண்டு கொண்டனர்.

26ஆம் தேதி மறவன் புலவு பிரபாகரன் தூக்குக்காவடியை ஏற்பாடு செய்து கொண்டு வந்தார். ஏற்கனவே கடந்த ஆண்டுகளிலும் அவர் இதனை ஒழுங்கமைத்திருந்தார். தூக்குக் காவடியில் தொங்கிக் கொண்டு வருவோர் காவடி ஆடியபடியே திலீபனின் உருவப்படத்துக்கு மாலை இடுவதை தொடர்ச்சியாக இந்நிகழ்வில் கலந்து கொண்டிருப்பவர்கள் கண்டிருப்பார்கள். தங்களின் தமிழ் உணர்வை வெளிப்படுத்த உடல் வலியையும் பொருட்படுத்தாது காவடி எடுத்து வருவோரை உடனடியாக மாலையிட்டு அஞ்சலி செலுத்த விடுவது வழமை. இந்த வருடமும் அதன் தாற்பரியத்தை உணராத முன்னணியினர் இடையூறு விளைவித்தனர். தங்களிடம் ஏற்கனவே அனுமதி பெறவில்லை என ஒருவர் குற்றம் சாட்டினார் ஒருவர். தூக்குக்காவடி ஆடியபடியே வரும் போது பொதுச் சுடர் அவர்கள் நெஞ்சில் முட்டும் அபாயம் இருந்தது எனவே அதனைச் சற்று தள்ளி வைக்குமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்ததால் இழுபறி ஏற்பட்டது. இந்த தள்ளு முள்ளினால் முன்னணியைச் சேர்ந்த ஒருவருக்கு நெஞ்சில் தீக்காயம் ஏற்பட்டது. அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். திலீபனின் நினைவிடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றமை வருத்தமளிக்கிறது.

பொதுக் கட்டமைப்பில் தீவக நினைவேந்தல் குழுவை பிரதிநிதித்துவம் செய்யும் தனுவை, முன்னணியினர் மோசமாகத் தாக்கினர் என்ற விடயத்தையும் ஆழ்ந்த மன வேதனையுடன் சுட்டிக் காட்டுகின்றோம். மாமனிதர் குமார் இருந்திருந்தால் தனது இருக்கையில் இருந்து எழுந்து வந்து தூக்குக் காவடியினரை வரவேற்று அஞ்சலி செலுத்த வைத்திருப்பார் என்பது நிதர்சனமான உண்மை . குரு முதல்வர், வேலன் சுவாமிகளை மலரஞ்சலி செய்ய விடாது வேண்டுமென்றே தடுத்தமை, வேலன் சுவாமிகளை தூசண வார்த்தைகளால் திட்டியமை போன்றவை மிக அநாகரிகமான செயற்பாடுகள். இவர்கள் இருவரும் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்கள் என்பதாலேயே தடுக்கப்பட்டார்கள்.

முன்னாள் போராளிகளாக இருந்தாலும் தேர்தல் அரசியலில் ஈடுப்பவர்கள் என்ற ரீதியில் ஜனநாயக போராளிகள் தரப்பினரையும் மறவன் புலவு பிரபாகரனையும் இக்கட்டமைப்பினுள் நாம் உள்வாங்கவில்லை. வீணான சச்சரவுகளை முன்னணியினர் கிளப்புவர் என்பதற்காகவே நாம் இவ்வாறு நடந்து கொண்டோம். இறுதி யுத்தத்தின் பின்னர் திலீபனின் நினைவேந்தலை முதன் முதலில் ஏற்பாடு செய்து நடத்தியது மறவன் புலவு பிரபாகரனும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினரும்தான் என்பதற்கு ஊடக செய்திகளும் ஆதாரமாக உள்ளன. ஆயினும் இக்கட்டமைப்பில் நான் இருக்கிறேன் தானே என்ற திருப்தியுடன் இந்தத் தம்பிகள் விலகி இருந்தனர். முதலில் ஏற்பாட்டுக் குழுவில் இடம் பெற்ற பார்த்தீபனையும் பொதுக் கட்டமைப்பில் இணைக்கவில்லை.

பிரச்சினை இல்லாமல் நிகழ்வை நடத்த முனைகையில், தான் பொதுக்கட்டமைப்பை கண்காணித்து வருவதாக நகர முதல்வர் கூறியமை விசனத்தை ஏற்படுத்தியது. நாம் எந்தக் கட்சியையோ அணியையோ சாராதவர்கள் என சுட்டிக் காட்டினோம். அதுவும் இக்கட்டமைப்பின் தலைவராக நல்லை குருமகாசன்னிதானம் விளங்குகையில் இப்படி ஒரு அறிவிப்பை மாநகர முதல்வர் தெரிவித்தமை துரதிஷ்டவசமானது. அரசியலில் ஈடுபடுவோர் பலதையும் பத்தையும் பேசுவர் என்ற வகையிலேயே இதனையும் நோக்க வேண்டியுள்ளது.

தமக்கு எதிரானவர்கள் எனக் கருதுவோரை இந்தியாவில் கைக்கூலிகள் எனக் கூறுவது முன்னணியினரின் வழமை. கஜேந்திரகுமாரோ மற்றும் முன்னணியின் பிரமுகர்கள் எவருமோ இந்திய தூதரத்துக்குள்ளோ துணைத் தூதரகத்துக்குள்ளோ காலடி எடுத்து வைக்கவில்லை, அத்தரப்புடன் தமது உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலம் கூட தொடர்பு கிடையாது என பகிரங்கமாக கஜேந்திர குமாரால் கூற முடியுமா? அரசியல் லாபத்திற்காக பிடிக்காதவர்களை இவ்வாறு கொச்சைப் படுத்துவது இயலாமையின் வெளிப்பாடு. பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்தவர்கள் அங்கு இனப்படுகொலையாளிகளை கௌரவ (Honourable) என பெயருக்கு முன்னால் விழித்து உரையாற்றுபவர்கள் தமக்குப் பிடிக்காதவர்களை அரசின் உளவாளிகள் என குற்றஞ் சாட்டுவது கோமாளித்தனமானது.

நான் அவமதிக்கப்பட்ட போது ஏற்பட்ட கோபத்தினாலும், என் மீது கொண்ட அன்பினாலும் ஜனநாயக போராளி கட்சியினர் சில கடுமையான வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டமை துரதிஷ்டவசமானது.

மிகவும் அயோக்கியத்தனமான ஒரு விடயத்தை இறுதியாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதாவது

“எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும்

இம்மண்ணை ஆள அருகதை அற்றவர்கள்

இவ்வாறு குறிப்பிட்டு காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. இக்கருத்துக்குரியவர் கஜேந்திரகுமார், கஜேந்திரன், சுகாஷ் என யாரோ ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் திலீபனைக் குறிப்பிட்டதன் மூலம் மக்களை திசை திருப்ப முனைகின்றனர். திலீபன் இயக்கத்தில் இணைந்த காலத்திலேயே அரசியல் பணிக்கு அனுப்பப்பட்டவன். அவன் அரசியல் பொறுப்பாளராகி நல்லூரில் மூச்சை விட்ட இக்கால இடைவெளியில் எந்தத் தேர்தலும் நடைபெறவில்லை. எண்பத்து மூன்றாம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூராட்சி சபைக்கான (யாழ் மாநகர சபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகள்) தேர்தலுக்கான அறிவிப்பு வந்தது. ஸ்ரீலங்கா அரசின் நிர்வாகத்துக்கான சகல தேர்தல்களையும் நாம் நிராகரிக்கிறோம் என்ற நிலைப்பாடு அப்போது எடுக்கப்பட்டது. தீர்மானம் குறித்த துண்டு பிரசுரத்துக்கான வசனங்களை தலைவரே தனது கையால் எழுதியிருந்தார்

எந்த ஒரு கூட்டத்திலோ பத்திரிகை அறிக்கையிலோ திலீபன் இவ்வாறு பேசியதாக செய்தி வெளிவரவில்லை . ஒளிநாடாவிலும் இதனை காண முடியாது. சில காலம் மட்டக்களப்பில் நான் இருந்தேன். ஆகவே எனக்கு இதுபற்றித் தெரியாது. எங்கேயாவது இப்படி திலீபன் சொன்னானா? என திலீபன் பிரதேச பொறுப்பாளராக இருந்த போதும், உண்ணாவிரதம் இருந்த அத்தனை நாட்களும் அருகில் இந்த ராஜனை கேட்டேன். ஒரு போதும் திலீபன் இப்படிச் சொல்லவில்லை என உறுதியாகச் சொன்னான். முன்னணியின் செயற்பாடுகள் பற்றிய தீர்ப்பு இனி மக்கள் கையில்தான்.

திலீபனின் ஒப்பற்ற தியாகத்தை மலிவு விலையில் விற்பதை அனுமதிக்கப் போகிறோமா?

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கினால் நாட்டில் மனித உரிமை பாதுகாக்கப்படும்!

## முன்னாள் எம்பி கோடீஸ்வரன் தெரிவிப்பு




(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கையில் இன்று மூவின மக்களுக்கும் எதிராக பாய்ந்திருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கினால் மாத்திரமே இலங்கையில் மனித உரிமைகள்

– இவ்வாறு அம்பாறை மத்திய முகாமில் நடைபெற்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் அன்று தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக இலங்கை அரசால் அராஜகமாகக் கொண்டுவரப்பட்டது. இன்று அதே சட்டம் ஏனைய முஸ்லிம் சிங்கள மக்கள் மீதும் பாய்கின்றது. இந்த சட்டத்தால் மனித உரிமை மீறப்பட்டிருக்கின்றது. இனப்படுகொலை இடம்பெற்றிருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனவேதான் இப்படிப்பட்ட கொடுமையான சட்டத்தை நீக்கும்படி கோரி இந்த கையெழுத்து வேட்டையைநாம்ஆரம்பித்து இருக்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்கினால் மாத்திரமே இலங்கையில் மனித உரிமை பாதுகாக்கப்படும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த வேட்டையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். – என்றார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## 36ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி I - 2022)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி I) ஐப்பசி மாதம் 6ஆம்,7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 8 அமர்வுகளாக நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில்; பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவேட்டறையில்(**Record Room**) வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக் கொள்ளும்போது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் எடுப்பதற்கான சகல ஒழுங்குகளும் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டதாரிகள் தமக்குரிய பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும், ஏனைய பட்டமளிப்பு விழா தொடர்பான அறிவுறுத்தல்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும்; வெளியீட்டுக்கிளையின் அறிவித்தல்; பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி: **www.jfn.ac.lk**

| திகதி | நேரம் | பட்டம் |
| --- | --- | --- |
| 01.10.2022 (சனிக்கிழமை) | மு. ப. 10.30 –மதியம் 12.30<br>பி. ப. 02.00 –பி.ப. 05.00 | • வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி<br>• மருத்துவ விஞ்ஞானமாணி<br>• பொறியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• விஞ்ஞானமாணி(பொது)<br>• பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• கணனி விஞ்ஞானத்தில் இளமாணி |
| 02.10.2022 (ஞாயிற்றுக்கிழமை) | மு. ப. 09.00 – மதியம் 12.30<br>பி. ப. 02.00 – பி.ப. 05.00 | • கலாநிதி, முதுமெய்யியல்மாணி,<br>• முதுவிஞ்ஞானமாணி (சூழல் முகாமைத்துவம்)<br>• முது வியாபார நிர்வாகமாணி<br>• தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• மருந்தகவியல் சிறப்புமாணி<br>• பட்டப்பின் தகமைச்சான்றிதழ் {கல்வியியல்-(பகுதி நேரம்,முழு நேரம்) சுகாதார(முகாமைத்துவம்}<br>• வியாபார நிர்வாகமாணி (சிறப்பு,பொது)<br>• வணிகமாணி (சிறப்பு, பொது) |
| 03.10.2022 (திங்கட்கிழமை) | மு. ப. 09.00 – மதியம் 12.30<br>பி. ப. 02.00 – பி.ப. 05.00 | • சிறப்புக் கலைமாணி(Honours degree)<br>• நுண்கலைமாணி(நடனம்,சங்கீதம், சித்திர(மும் வடிவமைப்பும்) |
| 04.10.202 (செவ்வாய்க்கிழமை) | மு. ப. 09.00 – மதியம் 12.30<br>பி. ப. 02.00 – பி.ப. 05.00 | • கலைமாணி (பொது)<br>• கலைமாணி (சிறப்பு)<br>• மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணி<br>• சட்டமாணி<br>• விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி<br>• பொறியியலில் சிறப்பு தொழில்நுட்பமாணி<br>• உயிர்முறைமைகளில் சிறப்பு தொழில்நுட்பமாணி<br><br>தொலைக்கல்வி<br>• வியாபார முகாமைத்துவமாணி<br>• வணிகமாணி (சிறப்பு, பொது) |

குறிப்பு:

1) பட்டதாரிமாணவர்கள் கல்வி விவகாரங்கள் மற்றும்; வெளியீட்டுக்கிளையினால் வழங்கப்படும் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வவுனியா வளாகத்தின் பட்டதாரிகள் தங்களது பட்ட அங்கிகளை 03.10.2022(திங்கட்கிழமை) தொடக்கம் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.(தொலைபேசி இல:024 222 3317) மின்னஞ்சல் முகவரி : dr.exams@vau.ac.lk

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**27.09.2022.**

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக் கருத்தரங்கு



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புலமைக்குழுவும் மாங்குளக்கிளையும் ஒழுங்குபடுத்தும் கல்விக்கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, மாங்குளம் ஏ – 9 வீதியில், துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

நெடுந்தீவு கத்தோலிக்க திரு அவையும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்துநடத்தும்கல்விக்கருத்தரங்கு இன்று (சனிக்கிழமை) காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் மாங்குளக்கிளையுடன் இணைந்து நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு முல்லைத்தீவு வவுனியா மாவட்டத்தில் பல்துறைசார் கலைஞர்களையும் சந்தித்ததுடன் அவர்களின் அளிக்கை நிகழ்வுகளும் மாங்குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## 15 லட்சம் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 15 லட்சம் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டு மக்களைப் பாதிக்கும் சமூக பொருளாதார நெருக்கடிக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த உதவி வழங்கப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிதி, உணவு, சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு உள்ளிட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காக வழங்கப்படவுள்ளது.

இலங்கையில்பலலட்சம்கணக்கான மக்களின்உணவுப்பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர்கள் சமூக பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் ஐரோப்பிய ஒன்றிய நெருக்கடி முகாமைத்துவ ஆணையாளர் ஜனுஸ் லெனாச்சிக் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய மனிதாபிமான நிதியுதவியின் மூலம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஆதரவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலைக்கு மற்றொரு எம்.பி.; ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் ச.வீ.கே.சிவஞானம், சிரேஷ்ட துணைச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகிய நால்வர் அடங்கிய குழுவே நேற்றுப் பிற்பகல் திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கிளை உறுப்பினர்களை மாவட்ட அலுவலகத்தில் சந்தித்துப் பேசியது. அச்சமயம் தங்களுக்கு தேர்தல் சமயத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவு செய்யுமாறு மாவட்டக் குழு உறுப்பினர்கள் கட்சித் தலைமையை வலியுறுத்தினர்.

கட்சியின் மத்திய குழு அண்மையில் கூடி எடுத்த முடிவின் பிரகாரம் திருகோணமலை நெருக்கடியை நேரில் ஆராய்வதற்காக மத்திய குழுவில் தெரிவு செய்யப்பட்ட மேற்படி நால்வர் குழு நேற்று திருகோணாமலைக்கு நேரில் விஜயம் செய்தது.

முதலில் திருக்கோணேஸ்வரம் கோயிலுக்குப் போய் அங்கு இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சி உயர் குழு பார்வையிட்டது. பின்னர் கட்சியின் மாவட்டக் குழுவோடு சந்திப்பு இடம் பெற்றது.

திருகோணமலையில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் பற்றி இந்தக் கூட்டத்தில் முழு விவரங்களும் விளக்கமாகக் கட்சித் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இந்த நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு கட்சிக்குச் செயலூக்கம் உள்ள ஓர் எம்.பி. திருகோணமலையில் இருப்பது அவசியம் என மாவட்டக் கிளை உறுப்பினர்கள் நேற்றும் வலியுறுத்தினர்.

இதற்காக இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்புத் தலைவருமான சம்பந்தனைத் தாங்கள் பதவி விலகி இடமளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் என்ற பாணியில் ஊடகங்களில் வெளிவந்த செய்தியை மாவட்ட குழு உறுப்பினர்கள் நேற்று மறுத்தனர்.

தேர்தல் சமயத்தில் முதலாவது தேசிய பட்டியல் உறுப்புரிமை திருகோணமலைக்கு வழங்கப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது, அதை இப்போதாவது - இனியும் காலதாமதமின்றி - நிறைவு செய்யும்படியே தாங்கள் கோருகின்றார்கள் என மாவட்டக் குழு உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற ஆலோசனைகளின் பின்னர் மாவட்டக் குழுவின் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்கத் தமிழரசுத் தலைமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நால்வர் குழு உறுதி வழங்கியதாகத் தெரிகிறது.

இந்த விடயம் குறித்து கொழும்பில் தமிழரசின் மூத்த தலைவரும், கூட்டமைப்புத் தலைவருமான சம்பந்தனை நேரில் சந்தித்துக் கலந்தாலோசித்து, மேல் நடவடிக்கை எடுக்க நால்வர் குழு முடிவு செய்திருப்பதாகவும் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

## நாணய நிதிய உதவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவாக மீள முடியும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் மற்றும் இலங்கை தலைவர் மசாஹிரோ நோசாகி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்கள் இந்த விடயங்களைச் சுட்டிக. காட்டியுள்ளனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாணய நிதியச் சபையின் அனுமதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து இலங்கை அரசாங்கம் முழு ஈடுபாட்டுடன் செயற்படுகின்றது. ஆனால் பல்தரப்புக் கடன் வழங்குநர்களின்ன் காலக்கெடு நிச்சயமற்றதாக இருப்பதாகவும், எனவே அவர்களுடன் முன்னெடுக்கும் கலந்துரையாடல்களிலேயே இவை தங்கியுள்ளனா எனவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வாதற்கான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள இலங்கைக் குழு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், தற்போது வரையில் இலங்கைக்கு சாதகமான பதிலை நாணய நிதியம் வழங்கவில்லை எனப் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம் –
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






# பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த அவதானம்: பொறுப்பற்று செயற்பட்டால் போராட்டம் தீவிரமடையும்!

## சன்ன ஜயசுமன எச்சரிக்கை

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த பொதுஜன பெரமுனவினர் அவதானம் செலுத்தியுள்ளனர். அரசியல் இலாபத்துக்காகப் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தாமல் நாட்டுமக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். பொறுப்பற்ற வகையில் செயற்பட்டால் வெகுவிரைவில் மக்கள் போராட்டம் தீவிரமடையும் என நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு அரசாங்கத்துக்கு உள்ளக மற்றும் வெளியக பிரச்சினை தீவிரமடைந்துள் ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்படவுள்ள நிலையில் அது தொடர்பில் அரசாங்கம் கூடிய அவதானம் செலுத்தாமல் பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் தொடர்பில் உண்மை நிலைப்பாட்டை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

நாட்டில் மந்தபோசணை பிரச்சினை தீவிரமடைந்துள்ள நிலையில் மந்தபோசணை பிரச்சினை இல்லை என அரசாங்கம் குறிப்பிட்டுக்கொள்கிறது.

உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது என்பதை அரசாங்கம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.

பிரச்சினைகளின் உண்மை தன்மையை அரசாங்கம் நாட்டு மக்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் குறிப்பிட வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கையும், நன்மதிப்பும் கிடையாது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து அரசமைப்பு திருத்தம் தொடர்பில் அவதானம் செலுத்தப் படுகின்றமை முற்றிலும் தவறானதாகும். மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படாவிடின் நாட்டில் மீண்டும் மக்கள் போராட்டம் தீவிரமடையும்.



பிரதமர் தினேஷ் குணவர்தனவை பதவியில் இருந்து விலக்கி புதிய பிரதரை நியமிக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அவதானம் செலுத்தியுள்ளது.

அரசியல் இலாபத்துக்காக பதவிகளில் மாற்றம் ஏற்படுத்த முயற்சிப்பதை விடுத்து மக்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். – என்றார்.

# பின்தங்கிய கிராமங்களில் வசிக்கின்ற கர்ப்பிணித்தாய்மாருக்கு குருதிச்சோகை!

## வைத்தியர் எம்.மகேந்திரன் சுட்டிக்காட்டு

பின்தங்கிய கிராமங்களை சேர்ந்த கர்பிணித் தாய்மார்களுக்கே அதிகமாக குருதிச்சோகை ஏற்படுவதாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பின்தங்கிய பகுதிகளில் பொதுவாக போசாக்கு பிரச்சினைகள் நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. தற்போதைய பொருளாதார நிலைக்கு முன்பாக இருந்த காலப்பகுதியிலும் கூட குருதிச்சோகையால் பாதிக்கப்படும் பின்தங்கிய கிராமப்புறங்களில் வசிக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

இந்நிலையில் கர்பிணித்தாய்மார்களுக்கு சுகாதார திணைக்களம் ஊடாக உரிய குருதி பரிசோதனையை மேற்கொண்டு அவ்வாறான



அறிகுறிகளைக் கொண்ட தாய்மார்களுக்கு மேலதிக கவனம் எடுத்து அதற்கான மாத்திரைகள் வழங்குவதுடன் ஏனைய விடயங்களும் வழங்கப்படுகின்றன.

அது குழந்தை பிறக்கும் போது ஏற்படும் சில பிரச்சினைகளை முடிந்தவரை தவிர்ப்பதற்கு உதவும். இதேவேளை குழந்தை சரியான நிறையுடன் பிறப்பதற்கும் தாய்மார்களின் போசாக்கு முக்கிய காரணியாகவுள்ளது.

இந்த பாதிப்பு நிலைமை சில காலங்களுக்கு நீடிக்கும் நிலையே . – என்றார்.

# மனித உரிமை பேரவையின் பிரேரணை நியாயமற்ற ஒன்று!

## இலங்கை வாக்கெடுப்பை கோரும் என்கிறார் அலி சப்ரி



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் நியாயமற்ற பிரேரணை தொடர்பில் இலங்கை வாக்கெடுப்பைக் கோரும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை நியாயமற்றது. பொருளாதார நெருக்கடியின் போது நாட்டின் கௌரவத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் ஒன்று என்பதால் இலங்கை தனது நண்பர்களுடன் இணைந்து பிரேரணை தொடர்பாக வாக்கெடுப்பைக் கோரும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்

இலங்கை தொடர்பான பிரேரணை நியாயமற்றது என வெளிவிவகார அமைச்சர், எக்கனமி நெக்ஸ்ட் இணையத்தளத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இது எங்கள் அரசமைப்பிற்கு எதிரானது நாங்கள் இதற்குப் பதிலளிக்கவேண்டும். நாங்கள் இதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், நாங்கள் வெற்றிபெறுகின்றோமோ அல்லது தோல்வி அடைகின்றோமோ என்பது முக்கியமல்ல. நாங்கள் விட்டுக்கொடுக்க முடியாத விடயங்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் எங்கள் நண்பர்களை பிரேரணைக்கு எதிராக வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்வோம் என அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நாங்கள் ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறை தொடர்பாகவும் இலங்கைக்கு வெளியே பாதுகாப்பு படையினரின் நீண்டகால பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பிரேரணையில் பொருளாதாரக் குற்றங்கள் என்ற சிலவிடயங்களை குறிப்பிட்டுள்ளனர் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. மனித உரிமை பேரவை பொருளாதார நெருக்கடி தொடர்பாக என்ன செய்கின்றது என வெளிவிவகார அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# திருடர்களை பாதுகாக்கும் அமைப்பே தேசிய சபை!

## ஹேஷா விதானகே சாடல்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கே தேசிய சபை அமைக்கப்பட்டு இருக்கிறது. மேலும் திருடர்களைப் பாதுகாக்கும் அமைப்பே தேசிய சபை என்றும் இதனூடாக ஜனாதிபதியின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பின்பக்கத்தில் இருந்து யார் ஆதரவு வழங்குகிறார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் பிரதான எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை அவர் தெரிவித்தார். அது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

நாட்டு மக்களுக்கு அரசாங்கம் செய்தி ஒன்றைக் கூறுவதற்கு முற்படுகிறது. அதாவது பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நாட்டு மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் தற்போதைய அரசாங்கத்தால் தீர்க்கப்பட்டுள்ளன என்று.

இந்நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவின் உரையொன்றைச் செவிமடுத்தேன். அதில் அவர் நாட்டில் நீண்ட எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள் இல்லாமல் போயுள்ளன.

மேலும் பல மணி நேர மின்வெட்டு தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் யார்? தற்போதைய அரசாங்கத்தாலேயே இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்கிறார். இது வேடிக்கையான விடயமாகும்.

மேலும் அம்பாந்தோட்டையில் மந்த போசனையால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று செய்திகள் வெளிவர ஆரம்பித்த பின்னர் நாமல் ராஜபக்ஷ நடுங்கிறார். அம்பாந்தோட்டையிலேயே மந்தபோசனையால் சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று கூறும் போது நாமல் ராஜபக்ஷ மாத்திரம் அல்ல முழு ராஜபக்ஷ குடும்பமுமே நடுங்க வேண்டும்.



மேலும் எமக்கு அரசாங்கத்திடம் இருந்து தேசிய சபையில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எங்களுக்கு ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயற்பட முடியாது. திருடர்களைப் பாதுகாக்கும் அமைப்பே இந்த தேசிய சபை.

எனவே நாம் பொதுமக்களுக்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி மக்களுடைய கடமைகளை நிறைவேற்ற முன்நின்று செயல்படும்.

ரணில் விக்ரமசிங்கவை எதிர்த்து அவருடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பின்பகத்தில் இருந்து யார் ஆதரவு வழங்குகிறார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். – என்றார்.

# பொருளாதாரக் குற்றவாளிகள் அரசில் இருக்கும்வரையும் நாட்டின் குற்றங்களை முடிவிற்கு கொண்டுவர முடியுமா?

## கபீர் ஹாசீம் கேள்வி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் 'பொருளாதாரக்குற்றங்கள்' என்ற புதியதொரு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றது.

இருப்பினும் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இந்தப் பொருளாதாரக்குற்றங்கள் இப்போதேனும் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றதா? தற்போதைய அரசாங்கத்தில் பொருளாதாரக்குற்றவாளிகள் அங்கம் வகிக்கும் வரையில் எம்மால் அந்தக் குற்றங்களை முடிவிற்குக்கொண்டுவரமுடியுமா? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

தற்போது நாட்டின் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுவருகின்றது. பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாம் இதுதொடர்பில் ஏற்கனவே சுட்டிக்காட்டியபோதிலும், அதனையாரும் செவிமடுக்கவில்லை.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.10.2022இல் வெளியிடப்பெற்றது.